



சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## மானியக் கோரிக்கை எண்: 29

## அறிவிப்புகள்

**2022-2023**

## தங்கம் தென்னரசு

தொழில்துறை அமைச்சர்





அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம்,
சென்னை-600 001.

சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## மானியக் கோரிக்கை எண்: 29

## அறிவிப்புகள்
2022-2023

## தங்கம் தென்னரசு
தொழில்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022



பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

– அய்யன் திருவள்ளுவர்

# கலை பண்பாட்டுத் துறை

## அறிவிப்புகள்

## 2022-2023



1. பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழாவான 'நம்ம ஊரு திருவிழா' சென்னையோடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் ரூ.6 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும். இந்நிகழ்ச்சிகளில் பங்குபெறும் கலைஞர்கள் மாவட்ட அளவில் விழாக்கள் நடத்தி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

   நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கவும், உலகெங்கும் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலை வடிவங்களை அறியச் செய்திடவும், 2021-2022 ஆம் ஆண்டு பிரம்மாண்ட கலைவிழா 'நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் சென்னையில் நடத்தப்பட்டதைப் போன்று, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் 'நம்ம ஊரு திருவிழாக்கள்' நடத்தப்படும். இந்நிகழ்ச்சியில் பங்குபெறும் கலைஞர்கள் மாவட்டவாரியாக நடத்தப்படும் விழாக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் இந்த பிரம்மாண்ட விழாக்கள் நடத்தப்படும்.

**'Namma Ooru Thiruvizha' – a grand folk arts festival will be organised in Coimbatore, Madurai, Tiruchirappalli and Tirunelveli in addition to Chennai at a cost of Rs 6 crores. Artistes will be selected to perform in these events by conducting district level festivals.**



2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டங்களுக்கான இணைய வழி சேவைகளைத் தொடங்கும்.

நலிந்த கலைஞர்கள் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கான நிதியுதவிகள் பெறுவதற்காக இணைய வழியில் விண்ணப்பிக்கவும், விரைவாகவும், ஒளிவு மறைவற்ற வகையிலும் பணிகளை மேற்கொள்ளவும் மென்பொருள் உருவாக்கப்படும். ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இந்த இணையவழி சேவைகள் செயல்படுத்தப்படும்.

**Tamil Nadu Eyal Isai Nataka Mandram will start providing online services for availing various benefits at a cost of Rs 20 lakhs.**

3. பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பிற இடங்களில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி, தமிழ்நாட்டின் நாட்டுப்புற மற்றும் செவ்வியல் கலைகள் வளர்க்கப்படும்.

தமிழ்நாட்டின் அரிய கலை வடிவங்களை மக்களிடம் கொண்டு செல்லவும், அவற்றை வளர்க்கவும், கலை வாய்ப்புகள் வழங்கி கலைஞர்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கவும் பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பிற இடங்களில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

**Tamil folk and classical arts will be promoted by organizing cultural programmes at various locations like parks, beaches, museums and other places where people congregate at a cost of Rs 1 crore.**



4. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள திறந்த வெளி கலையரங்கம் ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தும் வகையிலும், பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் பயிற்சிக்காகவும் அவர்களின் திறமையை மேம்படுத்திட கலை நிகழ்ச்சிகளை அடிக்கடி நடத்திடவும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் திறந்த வெளி கலையரங்கம் ரூ.1.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படும்.

**The open-air Auditorium in Tamil Nadu Dr. J Jayalalithaa Music and Fine Arts University will be renovated at a cost of Rs. 1.43 crores.**

5. கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியின் முதல்வர் அறை, கல்லூரி அலுவலகம், கணினி அறை, நூலகம், வண்ணக்கலைத் துறை மற்றும் காட்சி வழித் தகவல் தொடர்பு வடிவமைப்புத் துறைகளின் கட்டடங்கள் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டில் முழுமையாக மேம்படுத்தப்படும்.

**The buildings in Government Fine Arts College, Kumbakonam will be upgraded at a cost of Rs. 1 crore.**





6. சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் பாரம்பரிய கட்டடம் மற்றும் இதர கட்டடங்கள் ரூ.7.33 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

பாரம்பரிய கட்டடத்தில் செயல்படும் நாட்டின் மிகப் பழமையான கல்லூரிகளில் ஒன்றான சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியின் பாரம்பரியக் கட்டடம், அதன் பாரம்பரிய அழகு மாறாமல் புதுப்பொலிவூட்டும் வகையில் ரூ.7.33 கோடி நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படும்.

**The Heritage building and other buildings in Government Fine Arts College, Chennai will be renovated at a cost of Rs. 7.33 crores.**

7. கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் அகில இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகத்தின் விதிமுறைகளின்படி ரூ.15.68 கோடி மதிப்பீட்டில் உரிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் விதிமுறைகளின்படி துறைகள் மற்றும் வகுப்பறைகளுக்கு புதிய கட்டடங்கள், வகுப்பறைகள், கணினி கூடம், கலையரங்கம், மாணவ மாணவியர் விடுதிகள், தளவாடப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். கல்லூரியின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு சுற்றுச்சுவர் கட்டப்படும். ரூ.15.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கண்ட பணிகள் முடிக்கப்படும்.

**New buildings will be constructed along with necessary facilities to comply with AICTE norms for Government Fine Arts College, Kumbakonam at a cost of Rs. 15.68 crores.**





8. கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் அனைத்து கல்லூரிகள், இசைப்பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் மன்றங்களுக்கு இசைக் கருவிகள், மின்னணு சாதனங்கள், துணை சாதனங்கள், கணினிக் கூடங்கள், மென்பொருட்கள், ஒலிப்பதிவுக் கூடங்கள், தளவாடங்கள் மற்றும் பிற வசதிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் வழங்கி கற்பித்தலின் தரம் நவீனப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

அரசு இசைக் கல்லூரிகள், அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இசைக் கருவிகள், மின்னணு சாதனங்கள், துணை சாதனங்கள், கணினிக் கூடங்கள், மென்பொருட்கள், ஒலிப்பதிவுக் கூடங்கள், தளவாடங்கள் மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்தி, கற்பித்தலின் தரம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் நவீனப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

**Teaching will be modernized and pedagogy improved by providing musical instruments, accessories, electronic equipment, computer labs, software, recording studios, furniture and other facilities to all Colleges, Music Schools and Jawahar Siruvar Manrams functioning under the department at a cost of Rs. 6 crores**

9. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் கடலூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் கடலூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு, கடலூர் வட்டம், மஞ்சக்குப்பம் கிராமம், வார்டு 7, பிளாக் 4, T.S.No.166/1A1A மற்றும் T.S.No.166/11-ல் மொத்தம் 0.0810 ச.மீட்டர் பரப்பில் ரூ.1.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**A new building will be constructed for the District Music School, Cuddalore which is functioning in a rental building at a cost of Rs. 1.60 crores.**



10. சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் உள்ள பாரம்பரியக் கட்டடமான ‘பிராடி கேசில்’ ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மீட்டுருவாக்கம் செய்து புனரமைக்கப்படும்.

சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் பழுதடைந்த நிலையில் உள்ள ‘பிராடி கேசில்’ கட்டடம் அதன் பாரம்பரியத் தன்மையும், எழிலும் மாறாமல் புனரமைக்கப்படும். இக்கல்லூரியில் மாணவியர் தங்கும் விடுதி அறைகள் புனரமைத்து மாணவியர் பாதுகாப்பினை உறுதி செய்ய சுற்றுச்சுவர் கட்டப்படும். ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கண்ட பணிகள் முடிக்கப்படும்.

**‘Brodie Castle’ – the Heritage building of Government Music College, Chennai will be restored and renovated at a cost of Rs. 2.80 crores.**

11. மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் சிற்ப அருங்காட்சியகம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு, மாணவர்களின் சிற்பங்களையும், ஓவியங்களையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மையம் ஏற்படுத்தப்படும்.

மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் உள்ள சிற்ப அருங்காட்சியகம் மேம்படுத்தப்பட்டு, தேவையான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, மாணவர்களின் சிற்பங்கள் மற்றும் ஓவியப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மையம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

**The Sculpture Museum at the Government College of Architecture and Sculpture, Mamallapuram will be upgraded and a display and sale counter for the sculptures and paintings made by the students will be created at a cost of Rs. 50 lakhs.**





12. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகக் கட்டடம், கலைஞர்கள் விடுதி, படங்கள் காட்சிக்கூடம் மற்றும் கலையரங்கம் ஆகியவை ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பணிகள் சிறப்பாக நடைபெறும் வகையிலும், மன்றத்திற்கு வந்து செல்லும் கலைஞர்களின் வசதிக்காகவும், 40 ஆண்டுகள் பழமை வாய்ந்த இம்மன்றத்தின் வளாகத்திலுள்ள அலுவலகக் கட்டடம், கலைஞர்கள் விடுதி, படங்கள் காட்சிக்கூடம் மற்றும் கலையரங்கம் ஆகியவற்றின் கட்டமைப்பு வசதிகள் ரூ.1.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

**The office building, artist hostel, portrait gallery and auditorium of the Tamil Nadu Eyal Isai Nataka Manram will be upgraded at a cost of Rs.1.54 crores.**

13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் சென்னையிலும், தமிழ்நாட்டின் 10 பிற மாவட்டங்களிலும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நாட்டுப்புறக் கலைகளைக் காட்சிப்படுத்தும் கலைவிழாவான பொங்கல் விழா நடத்தப்படும்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையின்போது, தமிழ்நாட்டின் அரிய கலை வடிவங்களை மக்களுக்கு காட்சிப்படுத்தவும், கலைஞர்களுக்கு கலை வாய்ப்புகள் வழங்கவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் சென்னையிலும், தமிழ்நாட்டின் 10 பிற மாவட்டங்களிலும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பொங்கல் கலை விழாக்கள் நடத்தப்படும்.

**Pongal Vizha – a cultural festival showcasing the heritage folk arts will be conducted in Chennai and ten other districts of Tamil Nadu by Tamil Nadu Eyal Isai Nataka Manram at a cost of Rs. 50 lakhs.**



14. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ஆண்டு அரசு நல்கை ரூ.3 கோடியாக உயர்த்தப்படும்.



அதிக எண்ணிக்கையிலான கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், அதிகமான கலை நிகழ்ச்சி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கான ஆண்டு அரசு நல்கை ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**The annual Government grant to Tamil Nadu Eyal Isai Nataka Manram will be enhanced to Rs. 3 crores.**

# அருங்காட்சியகங்கள் துறை

## அறிவிப்புகள்

## 2022-2023



1. சென்னை அரசு அருங்காட்சியக படிமக் கூடங்கள் மிகச் சிறந்த அருங்காட்சியக நடைமுறைகளின்படி, நல்ல அனுபவத்தை வழங்கும் வகையில் சிறப்பான காட்சியமைப்புகளுடன் ரூ.7 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

சென்னை, அரசு அருங்காட்சியக படிமக்கூடங்களில் உலகப் புகழ்பெற்ற பல்லவர், சோழர், விஜயநகர கால படிமங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2003-ஆம் ஆண்டில் இப்படிமக் கூடம் சைவம், வைணவம், புத்தம் மற்றும் சமண சமயங்கள் தொடர்பான சிறப்பு காட்சிக்கூடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தற்போது இப்படிமக்கூடங்கள் மிகச் சிறந்த அருங்காட்சியக நடைமுறைகளின்படி, நல்ல அனுபவத்தை வழங்கும் வகையில் சிறப்பான காட்சியமைப்புகளுடன் ரூ.7 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**The Bronze Icon Galleries at the Government Museum, Chennai will be upgraded by adopting best in class Museum practices to enhance the experience and display at a cost of Rs.7 crores.**



2. சென்னை, அரசு அருங்காட்சியக சின்னமாகத் திகழ்கிற அருங்காட்சியகக் கலையரங்கின் குளிர்சாதன கருவிகள், மின்னொளி சாதனங்கள், இருக்கைகள் மற்றும் தீ பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி மீண்டும் கலை நிகழ்ச்சிகளை நடத்த திறந்து வைப்பதற்கான பணிகள் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, அரசு அருங்காட்சியக சின்னமாகத் திகழ்கிற பாரம்பரிய கட்டடமான அருங்காட்சியகக் கலையரங்க மேற்கூரையில் மழைநீர் கசிவினை தடுத்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், இருபது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட குளிர்சாதனக் கருவிகளை மாற்றியமைத்து மின்னொளி சாதனங்கள், இருக்கைகள் மற்றும் தீ பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி மீண்டும் கலை நிகழ்ச்சிகளை நடத்த, திறந்து வைப்பதற்கான பணிகள் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**The iconic Museum Theatre at the Government Museum, Chennai will be reopened for performances by upgrading the Air-conditioning, lighting, seating and fire safety equipment at a cost of Rs.3 crores.**

3 . காஞ்சிபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோவிலின் சுற்றுலா விளக்க கட்டடத்தில் மாற்றி அமைக்கப்பட்டு புதிய காட்சிக்கூடங்களுடன் மேம்படுத்தும் பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை தற்போதைய வாடகை கட்டடத்திலிருந்து அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா விளக்க கட்டடத்திற்கு மாற்றி அமைத்து புதிய காட்சிக்கூடங்களுடன் மேம்படுத்தும் பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**Government District Museum at Kancheepuram will be relocated to the Tourist Interpretation Centre building of Arulmigu Ekambareswarar Temple and upgraded with new galleries at a cost of Rs.2 crores.**





4. நாகப்பட்டினம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் தற்போது செயல்பட்டு வரும் தனியார் கட்டடத்தில் இருந்து அரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி அங்கு மாற்றியமைக்கும் பணிகள் ரூ.1.4 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் இயங்கி வரும் வாடகை கட்டடம் சாலை விரிவாக்கம் காரணமாக இடிக்கப்பட இருப்பதால் அரசுக்குச் சொந்தமான பழைய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த பாரம்பரிய கட்டடத்தை பழுது பார்த்து மீட்டுருவாக்கம் செய்து, அருங்காட்சியகத்தை அங்கு மாற்றி அமைத்து புதிய காட்சிக் கூடங்களுடன் மேம்படுத்தும் பணிகள் ரூ.1.4 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**Government District Museum, Nagapattinam currently functioning in a private building will be shifted to a Government heritage building after taking up restoration of the building at a cost of Rs.1.4 crores.**

5. சென்னை, அரசு அருங்காட்சியக வேதியியப் பாதுகாப்பு ஆய்வகம் ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

சென்னை, அரசு அருங்காட்சியக அரும்பொருட்களை பாதுகாக்கும் வேதியியப் பாதுகாப்பு ஆய்வகத்தை தற்போதைய தேவைகளுக்கான நவீன கருவிகள், சுமை தூக்கும் கருவிகளுடன் மின்கல வாகனம் மற்றும் ஒருமித்த கட்டமைப்பு வசதிகளை அமைக்கவும் சிறப்பு திறன்பெற்ற இரு ஒப்பந்த பணியாளர்களை நியமித்து மேம்படுத்தும் பணிகள் ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**The Chemical Conservation Laboratory of the Government Museum at Chennai will be upgraded at a cost of Rs.50 lakhs.**





6. சென்னை, அரசு அருங்காட்சியக பாரம்பரிய சுற்றுச் சுவரின் உடைந்த பகுதிகளை பழுதுபார்த்து மீட்டுருவாக்கும் பணிகள் ரூ.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, அரசு அருங்காட்சியக வளாகத்தின் இருபுறம் உள்ள பாரம்பரிய சுற்றுச் சுவரின் பழுதடைந்த பகுதிகளையும் உடைந்த நுழைவாயில் முகப்பினையும் பழமை மாறாமல் அதே வகை கற்களைக் கொண்டு மீட்டுருவாக்கி, இரும்பு கிரில் கதவுகளுடன் மாற்றி அமைக்கும் பணிகள் ரூ.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**The heritage compound wall at the Government Museum, Chennai will be taken up for repair and restoration at a cost of Rs.45 lakhs.**

# தொல்லியல் துறை

## அறிவிப்புகள்

## 2022-2023



1. சிந்துவெளி முத்திரைகளுக்கும் குறியீடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆய்வு செய்வதற்காக பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் தமிழி(தமிழ்-பிராமி) எழுத்துகளை ஆவணப்படுத்துதல், மின்பதிப்பாக்கம் ஆகிய பணிகள் ரூ.77 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

சிந்துவெளி முத்திரைகள் மற்றும் குறியீடுகளுக்கு இடையேயான தொடர்ச்சியினைக் கண்டறிய தமிழ்நாட்டு அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்டுள்ள பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் தமிழி எழுத்துப் பொறிப்புகளை ஆவணப்படுத்தும் பணியினை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்துடன் இணைந்து ஈராண்டுகளில் மேற்கொள்ள 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.40.50 இலட்சமும், 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.36.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.77 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**Documentation and digitization of graffiti and Tamiḻi (Tamiḻ-Brāhmī) inscribed potsherds will be taken up to explore the links between Indus script and graffiti at a cost of Rs.77 lakhs.**



2. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் "மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல்" என்னும் ஈராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பு ரூ.80 லட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.

தொல்லியல் துறையில் இயங்கி வரும் தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் புதியதாக "மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியலில்" ஈராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பு துவங்கப்படும். இப்புதிய முதுநிலைப் பட்டயப் படிப்பில் மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல் தொடர்பான அனைத்து பாடங்களும் செய்முறைப் பயிற்சிகளும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்படும். மேலும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றிற்கு பயிலுதவித் தொகையாக ரூ.5,000/- வழங்கப்படும். 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் துவங்கிட ரூ.40 இலட்சமும், 2023-2024 ஆம் ஆண்டில் புதிதாக 10 மாணவர்கள் சேர்க்கைக்கு ரூ.40 இலட்சமும் என்ற வகையில் தொடரும் செலவினமாக மேற்கொள்ளப்படும்.

**A two years Post Graduate Diploma in Heritage Management and Museology will be introduced at the Tamil Nadu Institute of Archaeology & Museology at a cost of Rs.80 lakhs.**

3. புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.3கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

2021-2022 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு, மதுரை மாவட்டம் முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டி தமிழிக் கல்வெட்டுகள், செங்கல்பட்டு மாவட்டம் அனந்தமங்கலம் சமணர் சிற்பங்கள் ஆகிய சின்னங்களை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்தி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**Infrastructure facilities and basic amenities will be provided for the development of the newly declared protected monuments as tourist destinations at a cost of Rs. 3 crores.**

4. அண்மையில் புயலால் சேதமடைந்த தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையினை ரூ.65 லட்சம் செலவில் மறுசீரமைக்கப்படும்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் 7.19 ஏக்கர் பரப்பளவில் உள்ள டேனிஷ் கோட்டை 1979-இல் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சமீப காலத்தில் ஏற்பட்ட கஜா மற்றும் நிவர் புயலின் காரணமாக கோட்டையின் சுற்றுச்சுவர் பாதிப்படைந்துள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட டேனிஷ் கோட்டையின் சுற்றுச் சுவர் ரூ.65 இலட்சம் செலவில் மறுசீரமைக்கப்படும்.

**The Danish Fort at Tharangambadi which was damaged during a recent cyclone will be repaired and restored at a cost of Rs.65 lakhs.**

5. முற்கால பாண்டியர் காலத்து பத்து குடைவரைக் கோயில்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக இந்த ஆண்டு அறிவிக்கப்படும்.

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாக்கப்பட்ட சின்னங்களைப் பழமை மாறாமல் பாதுகாத்து வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது தலையாயக் கடமையாகும். இத்தகைய உயரிய நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் திருநெல்வேலி மாவட்டம் பதினாலாம்பேர், சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் குறத்தியறை மற்றும் சிவகிரி, விருதுநகர் மாவட்டத்திலுள்ள புதுப்பட்டி, செவிலிப்பட்டி, திருச்சுழி, மூவரைவென்றான், திருத்தங்கல், ஆனையூர் ஆகிய பத்து ஊர்களிலுள்ள முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

**Ten Early Pandya period Cave Temples will be declared as Protected Monuments this year.**





6 . மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் உதிரிச் சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் போன்ற பல்வேறு தொல்லியல் கலைச்செல்வங்களை அதே இடத்திலோ அல்லது பாதுகாப்பான பிற இடத்திலோ வைத்து முறையாக பாதுகாக்க மாநில அரசு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.

தமிழ்நாட்டில் மாநிலத் தொல்லியல் துறை மற்றும் ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் கீழ் முறையே 100 மற்றும் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவையன்றி ஒவ்வொரு கிராமங்களின் பண்டைய பண்பாட்டினையும் தொன்மையையும் பறைசாற்றுகின்ற உதிரிச் சிற்பங்கள், கல்வெட்டுகள், குமிழிகள், மதகுகள், கிணறுகள் போன்றவை பாதுகாப்பு இன்றி உள்ளன. அந்தந்த ஊரின் பழமையையும் வரலாற்றினையும் பெருமையினையும் எடுத்து கூறுகின்ற அத்தகைய கலைச் செல்வங்களை அவ்வூரின் பெருமைகளை பறைசாற்றும் வகையில் அவை இருக்கும் இடத்திலோ அல்லது பாதுகாப்பான பிற இடத்திலோ வைத்து முறையாக பாதுகாக்க மாநில அரசு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.

**The State Government will introduce a new scheme to provide for both in-situ and ex-situ preservation and protection of various archaeological treasures such as loose sculptures and inscriptions found in various parts of the state.**

7. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ள சிந்துவெளி ஆய்வு மையத்திற்கு அகழாய்வு மற்றும் பிற திட்டங்கள் மூலம் தொல்லியல் துறையால் உருவாக்கப்பட்ட அறிவுச் செல்வத்தினை அடையாளம் காணுதல், இணைத்தல், தொகுத்தல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.89 லட்சம் நிதி மானியமாக வழங்கப்படும்.

சென்னை தரமணியில் அமைந்துள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சிந்துவெளி ஆய்வு உள்பட பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு வருகிறது. சிந்துவெளி ஆய்வு மையத்திற்கு அகழாய்வு மற்றும் பிற திட்டங்கள் மூலம் தொல்லியல் துறையால் உருவாக்கப்பட்ட அறிவுச் செல்வத்தினை அடையாளம் காணுதல், இணைத்தல், தொகுத்தல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 2022-2023 ஆம் ஆண்டு முதல் தொடரும் செலவினமாக ரூ.74 இலட்சமும், 2022-2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் தொடரா செலவினமாக ரூ.15 இலட்சமும் மானியமாக வழங்கப்படும்.



**A Financial grant of Rs.89 lakhs will be given to the Indus Research Centre at Roja Muthiah Research Library to identify, collate, document, preserve and disseminate the knowledge generated by the Department of Archaeology through excavations and other programmes.**



## தங்கம் தென்னரசு

தொழில்துறை அமைச்சர்

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

– அய்யன் திருவள்ளுவர்

